# ரஷ்ய ஐக்கிய அர்ப்பணத்தைப் பற்றிய சில மறுப்புகளுக்குப் பதில்!

சில குருக்கள், ரஷ்ய ஐக்கிய அர்ப்பணத்திற்குரிய நிபந்தனைகளாகிய "உலகிலுள்ள அனைத்து கத்.மேற்றிராணிமார்கள் பாப்பரசருடன் இணைந்து ஒப்புக்கொடுக்க வேண்டும்" என்பதற்கு, தங்களுடைய மறுப்புக்களைத் தெரிவிக்கின்றனர். அது என்னவெனில்,

**"நல்ல ஆண்டவர், பாப்பரசரை மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ரஷ்யாவை அர்ப்பணிக்க கேட்பதை புரிந்துகொள்ள முடியும். ஏனெனில் "கிறீஸ்துவின் பிரதிநிதி" என்ற முறையில் அவரது ஞான அதிகாரம் அகில உலகிற்குமாய் பரந்து விரிந்த ஒன்று. ஆனால் மேற்றிராசன மேற்றிராணிமார்கள் ரஷ்யா மீதான ஞான அதிகாரத்தைக் கொண்டிருக்க முடியாது. அப்படியானால், அவர்கள் எப்படி அந்த நாட்டை அர்ப்பணிக்க அதிகாரம் பெறுவார்கள்?"**

இத்தகைய கேள்வியினால் பாத்திமா செய்தியின் மிக முக்கியமான அம்சத்தை மறந்து விடுகிறார்கள். அது என்ன? "பரிகாரம்!" தேவதாய் "ஆடம்பரமான, பகிரங்கமான பரிகார முயற்சியையும், ரஷ்யா அர்ப்பணத்தையும் " கேட்டார்கள். மேற்றிராணிமார்களுக்கு ரஷ்யா மீதான அதிகாரம் இல்லையென்பது உண்மையே. அதே சமயம் அவர்கள் தங்கள் சொந்த பாவங்களுக்காகவும், தங்களது மேற்றிராசன மக்களின் பாவங்களுக்காகவும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு பரிகாரம் செய்யும் அதிகாரத்தை நிச்சயமாகக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய ஆடம்பரமான (பகிரங்க வழிபாடு) பரிகாரச் சடங்குகளை தங்களது மேற்றிராசனங்களில் நடத்த அதிகாரம் உண்டு. இந்த பரிகாரம், எல்லா வகையான பாவங்களுக்காகவும் இருக்கலாம். ஆனாலும், பாத்திமாவில் நமது அன்னை பொதுவாக இரண்டு வகையான பாவங்களைக் குறிப்பிடுகிறார்கள். முதலாவது வகையான பாவங்கள்: மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராக செய்யப்படும் 5 வகையான

தூஷணங்கள் மற்றும் துரோகங்கள். நமதாண்டவர் 1930, மே 29-ல் தூயியில் சகோதரி லூஸியாவுக்கு இதனை வெளிப்படுத்தினார். அவை:

1. மாதாவின் அமலோற்பவத்துக்கு எதிரான தூஷணங்கள்.

2. மாதாவின் தெய்வீக தாய்மைக்கு எதிரான தூஷணங்கள். மாதா சகல மனிதர்களுக்கும் தாயாக இருக்கிறார்கள் என்பதை மறுக்கும் நிந்தை.

3. மாதாவின் நித்திய கன்னிமைக்கு எதிராகச் சொல்லப்படும் தூஷணங்கள்.

4. மாதாவின் பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றும் தூரோகங்கள்.

5. மாதாவின் பக்திப்பொருட்களை அவமதித்து அகற்றும் துரோகங்கள்.

இந்த நிந்தைகளும், தூஷணங்களும் கிறீஸ்தவ மக்களின் நல்லொழுக்கத்தையும், விசுவாசத்தையும், அதன் மேன்மையையும் கறைப்படுத்துவதாக இருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை! (காண்க:)

இரண்டாவது வகையான பாவங்கள்: விசுவாச மறுதலிப்பு ஆகும். விசுவாசிகள் உண்மையான சத்திய விசுவாசத்தை மறுதலித்து உலக ஆதாய, கடவுள் மறுப்பு கம்யூனிசத்தை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வது ஆகும். (இதில் கத்தோலிக்க விசுவாசிகள் பதித புராட்டஸ்டாண்ட் மற்றும் பெந்தேகோஸ்த் சபைகளுக்குச் செல்வதும் அடங்கும். –ஆ.ர்.)

இந்த இரண்டு வகையான பாவங்களும் சர்வேசுரனை நோகச் செய்கின்றன. அதோடு அவை, கிறீஸ்தவர்களின் நல்லொழுக்கத்திற்கும், உண்மையான விசுவாசத்திற்கும் விரோதமானவைகளாவும் உள்ளன. இவை மிகவும் மோசமானதும், மிக கடுமையாக தற்போது எங்கும் பரவி வருவதுமாகும். இதனால் தான் நமதாண்டவர் ரஷ்யா உண்மையிலேயே மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணம் செய்யப்படுவதற்கு முன்பாக, அத்தாயின் இருதயத்திற்குப் பரிகாரப் பக்தியின் மூலமாக ஆன்மாக்களைச் சுத்தப்படுத்த விரும்புகிறார். இது உண்மையான, மிகவும் சரியான தூய்மைப்படுத்துதலுக்கு வழியாக உள்ளது. ஏனெனில் இப்பரிகாரப் பக்தி சர்வேசுரனிடமிருந்து மன்னிப்பின், அர்ச்சிப்பினுடைய வரப்பிரசாதங்களை பெற்றுத்தரும் வல்லமை

கொண்டது. இதனால் உலகம் முழுவதும் தூய்மைப்படுத்தப்படும். இது உலகம் முழுவதுமுள்ள கத்தோலிக்க மேற்றிராணிமார்கள் பாப்பரசரோடு இணைந்தால் ஏதுவாக அமையும், இதற்கு இணைப்பு - ஐக்கியம் தேவை.

சந்தேகமற, ஆன்மாக்கள் சிறந்த முறையில் தூய்மையை - அர்ச்சிப்பை பெற்றுக்கொள்ள, உலகில் உண்மையான ஞான புதுப்பித்தல் துவங்கி, அது அழமானதாகவும், நிலைத்ததாகவும் இருக்க நமதன்னை தனிப்பட்ட முறையிலான ரஷ்ய அர்ப்பணத்தைக் கேட்கிறார்கள். ஏனெனில் 1917-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை உலகமனைத்திலும் தப்பறைகளையும், போராட்டங்களையும், பிரிவினைகளையும், அனைத்துப் புரட்சிகளையும், போர்களையும், திருச்சபைக்கும் பாப்பரசருக்கும் விரோதமான கலாபனைகளையும் தூண்டி, நாசத்திற்கு காரணமான நாட்டை அர்ச்சிக்க, தமது மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி கேட்டார்கள். இப்படி ரஷ்யா ஒப்புக்கொடுத்தலின் மூலம் தூய்மையடைந்து அர்ச்சிக்கப்படுவதால், ரஷ்யா மனந்திரும்புதல் என்ற வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளும்; ரஷ்ய அர்ப்பணத்தினால், மோட்சம் தரும் முதல் வாக்குறுதியாகிய இதில், இரண்டு வகையான மனந்திரும்புதல்கள் உள்ளன.

**1. ஞான, சமய ரீதியான மனந்திரும்புதல்.** ரஷ்யா, அர்த்தோடாக்ஸ் பிரிவினையிலிருந்து மாறி உண்மையான சத்திய கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

2. இந்த ஞான மனந்திரும்புதலின் விளைவாக அந்நாட்டின் அரசியல் மற்றும் சமூக மாற்றம் ஏற்படும். உலக ஆதாய, நாத்தீக அடக்குமுறை ஆட்சியிலிருந்து திருச்சபையின் போதனைகளுக்கு ஏற்ப அமைந்த, கிறீஸ்தவ அரசியல் சமூக நிலைக்கு மாறும். இது உலகம் ஒரு சமாதான காலத்தைப் பெற்றுக் கொள்ளும் வழியாக அமையும். எவ்வாறெனில், உலகின் பிரிவினைக்கும், போராட்டங்களுக்கும், அழிவுக்கு காரணமும், பெரிய தூண்டுகோலுமாக இருக்கும் நாடு (ரஷ்யா) அதன் மனந்திரும்புதலால் புனிதமாகும். அதனால் “உலகிற்கு ஒரு சமாதான காலம் வரும்” .

சர்வேசுரனின் தெய்வீகத் திட்டத்தில் அடங்கியுள்ள ஞானமும், ஒழுங்கும் எத்துணை மேன்மையானது! ஒரேயொரு தனி மனிதரின் (பாப்பரசர்)

தீர்மானத்தில் அனைத்தையும் அனுமதிக்கும் தெய்வீக ஞானம் எவ்வளவு உயர்வானது! இந்த உண்மையே, பாப்பசரிடமிருந்து இந்த அர்ப்பணத்தைப் பெற்றுக்கொள்ள அதிகமாக ஜெபிக்கத் தூண்ட வேண்டும். மிகுந்த அன்போடு, மரியாயின் மாசற்ற இருதய பரிகாரப் பக்தியை அனுசரிக்க ஊக்கப்படுத்த வேண்டும். இன்று எல்லா வகையான இடையூறுகளும், தடைகளும் இதில் இருந்தாலும் இறுதியில் நமதாண்டவர் 1931, ஆகஸ்ட் 29-ல் சகோதரி லூஸியாவுக்கு உள்ளரங்க தொடர்பில் கூறுவது: "...அவர்கள் வருந்துவார்கள்; ஆம்! அவர்கள் மனம் வருந்துவார்கள்; ஆனால் எல்லாம் பிந்திவிடும்! ...ஏற்கனவே ரஷ்யா உலகமெங்கும் தப்பறைகளைப் பரப்பிவிட்டிருக்கும்; போர்களையும், திருச்சபைக்கு எதிரான கலாபனைகளையும் தூண்டிவிட்டிருக்கும் ...ஆனால் அது மனந்திரும்பும்" என்று வாக்களித்துள்ளார்;.

இது இப்படியிருக்க, மறுப்பக்கம் இன்று திருச்சபையின் மிகப்பெரிய பிரச்சினையாக திருச்சபையில் ஞான அதிகாரம் மறைந்துவருகிறது. நவீனத்தால் திருச்சபை துன்புறுகிறது. ஆனால் ரஷ்ய அர்ப்பணம் செய்யப்பட்ட பிறகு, பாரம்பரிய ரீதியிலான அதிகார அம்சம் திருச்சபையில் மீண்டும் ஏற்படும். அதே சமயத்தில் அர்ப்பணம் திருச்சபையின் தெய்வீகச் சட்டத்தின் தலைமை பீடத்தினுடையவும், அதிகார படிநிலை ஆட்சியினுடையவும் மாண்பு மீண்டும் நிலைநாட்டப்படும்.

இது மரியாயின் மாசற்ற இருதயத்தின் வெற்றிக்கு முன்சுவையாக இருக்கும்!

மரியாயின் மாசற்ற இருதயமே, எங்கள் இரட்சணியமாயிரும்.